பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 04 சனிக்கிழமை 21.10.2023 கதிர் 344

# அரசியல் நோக்கம் இன்றியே இலங்கைக்குச் சீனா ஆதரவு


## அந்தநாட்டுத் தலைவர் அறிவிப்பு



நிலையான பொருளாதாரத்தைக் கட்டமைக்கஎவ்விதஅரசியல்நோக்கங் களுமின்றிஇலங்கைக்குஆதரவளிக்க சீன மக்கள் குடியரசு தயாரெனவும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணங்கிச் செயற்படுவதே தனது நோக்கமெனவும்சீனமக்கள்குடியரசின் ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வில்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க நிகழ்த்திய உரையானது இலங்கையின் மூலோபாயஅமைவிடத்தின்முக்கியத்தை எடுத்துக்காட்டியதாக சுட்டிக்காட்டிய சீனஜனாதிபதி,இலங்கைகொண்டுள்ள மத்தியஸ்தமான நிலைப்பாட் ☞2

## இது ரகசியம் அல்ல!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டு, அதுவும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதைப் பற்றி மட்டுமே பேசுவதற்காக நேரம் தருமாறு கேட்டு ஒரு கடிதம் எழுதுவோம் வாருங்கள் என்று தமிழ்க் கட்சித் தலைவர்கள் எல்லோருக்கும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆரவாரமாகத் தொடங்கப்பட்ட இந்த முயற்சி இன்னும் ஒப்பே றியதாகத் தெரியவில்லை. மனிதச் சங்கிலிப் போராட்டம், அடைப்புப் போராட்டம் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் போராடப் புறப்பட்டுவிட்டதாலோ என்னவோ கடிதத்தில் கையெழுத்திட்டு அனுப்புவதில் இப்போது யாரும் அக்கறைப்பட்டதாகத் ☞2

## வழக்கு வாபஸ்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம் சுமத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை சுற்றாடல் நீதிக்கான மையம் நேற்றுத் திரும்பப் பெற்றது.

வில்பத்து தேசிய பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ள மரிச்சுக்கட்டி மற்றும் கரடிக்குளி பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்ட குடியேற்றங்கள் உருவாக்க முற்பட்ட இடங்களில் மீள் மரநடுகைக்கு நடவடிக்கை எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நடைமுறைப்படுத்த தவறியிருந்தார்என்றுமுன்னாள் ☞2

## சீனாவிற்கு விகாரை மண்டபம் அமைத்து கொடுக்கிறது இலங்கை

### பணிகளை உடன் தொடங்க ஜனாதிபதி பணிப்பு

சீனாவின் முதல் பௌத்த விகாரையாக கருதப்படும் ஹினன் மாகாணத்தில் உள்ள 'வெள்ளை குதிரை' விகாரை வளாகத்தில் இலங்கை பாரம்பரிய கட்டடக்கலை அம்சங் களைப் பிரதிபலிக்கும் வகையில் விகாரை மண்டபம் மற்றும் ஸ்தூபி அமைக்கும் பணிகள் உடனடியாக தொடங்கப்படும்எனஜனா திபதிரணில்விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

பீஜிங்கில்'வெள்ளை குதிரை' விகாரையின் விகாராதிபதிவண.யின்லீ தேரர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கிடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதம ராக இருந்த காலத்தில் 'வெள்ளை குதிரை' விகாரை வளாகத்தில் இலங்கை விகாரை மண்டப நிர்மாணப் பணிகளை நடைமு றைப்படுத் துவதற்கு அப்போதையசபாநாயகர் கரு ஜயசூரியவினால் அடிக்கல் நடப்பட்டது. ஆனால், அதன் பின்னர் அதன் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் மீண்டும் அந்தப் பணிகளை ஆரம்பிக்குமாறும், விகாரை மண்டபத் திட்டங்களை புதிதாக தயாரிக்குமாறும் ஜனா திபதி பணிப்புரை வழங்கினார்.

பாஹியன் பிக்குவினால் இலங்கையிலிருந்து சீனாவிற்கு கொண்டு வரப்பட்ட பௌத்த பாலி நூல்களின் பிரதிகளை இந்த விகாரையில் வைப்பதற்காக இந்த விகாரை மண்டபம் இலங்கையினால் வழங்கப்பட ☞2

## காலநிலை மாற்ற பல்கலைக்கு உதவி வழங்க சீனா விருப்பம்

காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவும் இலங்கையின் யோசனைக்கமைய, அதன் கற்பித்தல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளுக்கான ஒத்துழைப்புக்களை வழங்க சீன நிறுவனங்கள் பலவற்றின் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சீனாவின் சுற்றாடல் பல்கலைக்கழகம், காலநிலைதொடர்பிலான முகவர் நிலையங்கள் பலவற்றின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று பீஜிங் நகரில் நடைபெற்றது.

இதன்போது, காலநிலை மாற்றம் தொடர்பிலான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவும் இலங்கையின் யோசனை மிகவும் காலோசிதமானதாகவும் தூரநோக்குடையதாகவும் காணப்படுகிறது என்று பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பில்பங்குதாரர்கள் பலருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பதாகவும், அது இலங்கையின் தனி முயற்சியாக மாத்திரமின்றிகூட்டுமுயற்சியாக செயற்படுத்துவதேதமது எதிர்பார்ப்பாகும்எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அதற்காக மேற்படி பல்கலைக்கழகம்தொடர்பில்ஏனையபங்குதாரர்களுடன்நிகழ்நிலைமூலம், பலசுற்றுபேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 6.5 கிலோ தங்கத்துடன் இலங்கையர்கள் கைது

### திருவனந்தபுரத்தில் சம்பவம்

இந்தியாவின் கேரள மாநிலம் திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையத்தில் 6.15 கிலோ கிராம் தங்கம் கடத்தினார்கள் என்கிற குற்றச்சாட்டில் 13 இலங்கையர்கள் மற்றும் ஒரு இந்தியர் அடங்கிய வர்த்தகர்கள் குழுவொன்று புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையர்களில் 10 பேர் தங்கத்தைத் தங்கள் உள்ளாடைகள், காலணிகள் மற்றும் ஜாக்கெட்டுகளுக்குள் ஒரு கலவை வடிவில் மறைத்து வைத்திருந்தார்கள் என்று ☞8

## படையினர் வசம் இருந்த காணிகள் கையளிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில்பிரதேசத்தில் அரசபடைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பாடசாலைகளின் காணிகள் மைதானங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தக் காணி அனுமதிப்பத்திரங்கள் அம்பாறை மாவட்டச் செயலக செயலாளர் சிந்தக அபேவிக்ரமவினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது திருக்கோவில் வலையக்கல்விப்பணிப்பாளர். இரா..உதயகுமாரின் ஏற்பாட்டில்இடம்பெற்றது.

இந்நிகழ்வில்பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் .சிந்தக அபேவிக்ரம விசேட அதிதிகளாக திருக்கோவில் ☞2

## 330 மில்லியன் டொலர் கிட்டும்

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவை வழங்க ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, 330 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, இரண்டாம் தவணைக் கொடுப்பனவாக இலங்கைக்குகிடைக்கவுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச நாணய நிதிய இலங்கைதூதுக்குழுவின் பிரதானி பீற்றர் புரூவர் வொஷிங்டனில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்ததாவது,

சீனாவின் எக்ஸிம் வங்கிக்கும் கனடாவுக்கும் இடையில் கடன் மறுசீரமைப்பக்கான இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்த இணக்கப்பாடு, ஊழியர்கள் மட்ட இணக்கப்பாட்டை எட்டுவதற்க காரணமாக அமைந்ததா என்று கேள்வி எழுப்பினால்இல்லைஎன்பதே பதிலாகும்.

இலங்கையின்அதிகாரிகளுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் இலங்கையின் பொருளாதார கட்டியெழுப்புவது ☞2

## நாணய நிதியத்தின் 2ஆம் கட்ட கடனுக்கான அதிகாரிகள் மட்ட இணைக்கம் எட்டப்பட்டது

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கடனை வழங்குவதற்கான அதிகார்கள் மட்ட இணக்கப்பாடு நேற்று எட்டப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். இலங்கை அதிகாக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மற்றும்நீடிக்கப்பட்ட கடன்வசதிகள் வேலைத் திட்டத்தின் முதலாவது மீளாய்வைநிறைவுசெய்தபின்னர் ஏற்பட்டஅதிகாரிகள்மட்டக்குழுவின் இணக்கப்பாடானது, பலதரப்பு கடன் வழங்குனர்களுக்கு எஞ்சிய தவணைகளை செலுத்துவதற்கும் கடன் மறுசீரமைப்பைத் துரிதப்படுத்துவதற்கும் உதவும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் ☞2

## ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணமாகச்சென்றிருந்த ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார்.

ஒரே மண்டலம் ஒரே பாதை திட்டத்தின் மூன்றாவது சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா சென்றஜனாதிபதி, அங்கு சீன அதிபர் உள்ளிட்ட உயர் தலைவர்கள் பலரையும் சந்தித்துப் பேசியிருந்தார்.ஒக்டோபர் 16 சீனாவிற்கு சென்ற ஜனாதிபதி,நான்குநாட்கள் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதியாகரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் சீனாவிற்கு முதற்றடவையாகப் பயணம் செய்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தெரியவில்லை. அது பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனிடம் கேட்டால், எல்லாத் தலைவர்களும் ஒன்றாக வந்தால் கடிதத்தை அனுப்பலாம் என்று விட்டேத்தியாகப் பதில் சொல்கிறார்.

கடிதம் எழுதுவதுற்கு எடுக்கப்பட்ட முயற்சி இடைநடுவில் தள்ளாடுகின்றது என்று கடந்த வாரமே நான் இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டியிருந்ததுவாசகர்களுக்கு நினைவிருக்கலாம். கடிதத்தை உடனடியாக அனுப்புவதா இல்லையாஎன்றமுடிவுஎடுக்கப்பட இருந்ததாக பல தவணைகள் நீதியரசர் விக்னேஸ்வரனால் அறிவிக்கப்பட்டன. ஆனால் அந்தத் தவணைகளுக்குள் முடிவெடுப்பதற்கு அவருடன் சேர்ந்தியங்குவார்கள் என்று உறுதியளித்த தலைவர்களில் சிலர் பின்னடித்துவிட்டதால்அந்தமுயற்சிவெற்றிபெறவில்லை.

மோடிக்கு எழுதுவதற்கான கடிதத்தை விக்னேஸ்வரன் ஏற்கனவே தயாரித்துவிட்டார். அது கட்சித் தலைவர்களின் பார்வைக்கும்தரப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் இந்த விடயத்தில் விக்னேஸ்வரனுடன் இணைந்து அதில் கையெழுத்திடத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த 7 கட்சிகளில் சில இன்னும் அதில் கையெழுத்திடவில்லை. அதிலும் முக்கியமாக, அரசமைப்பின் 13ஆவதுதிருத்தத்தைமுழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தபோதே வற்புறுத்தி வந்த ரெலோ இப்போது விக்னேஸ்வரனின் கடிதத்தில் கையெழுத்து வைக்கப் பின்னடிக்கின்றது.

இரண்டு மூ-ன்று தடவைகள் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வந்து கையெழுத்து வைப்பார் என்று கூறி தவணையிடப்பட்டது. ஆனால் அவர் கடைசி நேரத்தில் ஏதாவது சாக்குப்போக்குச்சொல்லிவரலாமல் கடத்திவிட்டார். முதலில் கடந்த வாரம்புதன்கிழமைகையெழுத்திட வருவார்எனரெலோவின்தலைவர் தெரிவித்திருந்தார். ஆனால் அன்றைய தினம் வரவில்லை. பின்னர் வெள்ளிக்கிழமை வந்து கையெழுத்திடுவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அன்றும் அவர் வரவில்லை. இதையடுத்து நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு அவர் வந்து கையெழுத்திடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டு கடிதம் அனுப்புவது ஒத்தி வைக்கப்பட்டது.

ரெலோ தலைவர் அந்தக் கடிதத்தில் கையெழுத்திடுவாரா இல்லையா என்கிற கேள்வி அப்போதிருந்தே நீடிக்கிறது. அதற்கொரு காரணம், ஐயப்பாடு ரெலோவில் காணப்பட்டதையும் இந்தப் பத்தியிலேயே சுட்டிக்காட்டியிருந்தேன். அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம் தனது முகப் புத்தகத்தில் பகிர்ந்த செய்தி ஒன்று கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக இருப்பதாகக் குறிப்பிட்டே அதனைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

மோடியை ஒன்றாகச் சந்திக்க முயற்சிப்போம் வாருங்கள் என்று விக்னேஸ்வரன்விடுத்தஅழைப்புத் தொடர்பில் பத்திரிகைகளில் வெளியாகிய செய்திகளைத் திரட்டி பதிவேற்றியிருந்த அவர், ''தனது தலைமையில்தான் என குண்டைப்போட்டுக்குழப்பிவிடுவார் கடைசியில்" என்றும்அந்தப்பதிவில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதாவது, தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பதற்கு மோடி ஒருவேளை இணங்கிவிட்டாரானால் அந்தச் சந்திப்புத்தனதுதலைமையில்தான் நடக்கவேண்டும், இங்கிருந்து செல்லும்தலைவர்கள்எல்லோரும் தனது தலைமையில்தான் செல்லவேண்டும் என்று வலியுறுத்தி இந்த முயற்சியையே விக்னேஸ்வரன் குழப்பிவிடுவார் என்று அர்த்தப்படுத்தியிருக்கிறார் வினோ.

இந்தஐயப்பாடேரெலோஇன்னும் கடிதத்தில் கையெழுத்திடாமல் இருப்பதற்கான காரணமாகக்கூட இருக்கலாம். இந்த விடயத்தை விக்னேஸ்வரனுடனேயே நேரில் பேசித் தீர்மானித்து விவகாரத்தை முடித்துவிடலாம். ஆனால் அப்படி நடக்கவில்லை. நாளைவருகிறோம் நாளை வருகிறோம் என்று பிள்ளையார் கலியாணம் மாதிரி இழுத்துக்கொண்டே போகிறார்கள்.

விக்னேஸ்வரன் தலைமையில் செயற்படவிரும்பவில்லைஎன்றால், அதனைமுற்கூட்டியேதெரியப்படுத்தி, மோடிசந்திப்புக்குஇணங்கினால்யார் தலைமையில் இந்தியா செல்வது என்பதையம் தீர்மானித்துவிட்டால் பிரச்சினை இல்லை. ஆனால், அப்படிவெளிப்படையாகப்பேசுவதற்குத் தயங்கும் தலைவர்கள், இப்படி கண்ணாமூச்சி ஆடி, எல்லாவற்றையும் போட்டுடைக்கிறார்கள். கடைசியில் இவர்கள் மோடிக்கு கடிதம்எழுதினார்களோஇல்லையோ இந்த விடயத்தைத் தொடக்கி, மோடியுடன்பேசஒருகோரிக்கையை முன்வைப்பதற்குக்கூட தமிழ்த் தலைவர்களிடம் ஒற்றுமையில்லைஎன்கிறசெய்தியைஉலகம் முழுக்க நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். வாழ்கஇவர்களின் தலைமை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டையும் பாராட்டினார்.

சீனாவிற்கானஉத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்டிருக்கும்ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கமற்றும்சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஆகியோருக்கிடையிலான இருதரப்புச் சந்திப்பு நேற்றுசீனமக்கள்பொதுச்சபையில் நடைபெற்றது.

இதன்போது சீன ஜனாதிபதியினால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டதோடு, சிநேகபூர்வ கலந்துரையாடலின் பின்னர் அரச தலைவர்கள் இருவரும் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

சீனாவின் மண்டலம் மற்றும் பாதை வேலைத்திட்டத்திற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்புக்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரம் மற்றும்ஹம்பாந்தோட்டைதுறைமுக வேலைத்திட்டத்தை 'பெல்ட் அண்ட் ரோட்' வேலைத்திட்டத்தின் கீழான முதலாவது வேலைத்திட்டங்களாக கருதுவதாகவும், இலங்கை உற்பத்திகளை சீனாவிற்கு இறக்குமதி செய்யும் அதேநேரம், இலங்கைக்குள் சீன முதலீடுகளை அதிகளவில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு சிநேகபூர்வ, நடைமுறை மற்றும் துரித ஒத்துழைப்புக்களைவழங்கத் தயாரெனவும் சீன ஜனாதிபதி உறுதியளித்தார்.

பாகியன் பிக்கு மற்றும் ஷென் ஹர் ஆகியோரின் குறிப்புக்கள் ஊடாக சீன -இலங்கை நட்புறவு தொடர்பிலான பல்வேறு வரலாற்று தகவல்கள் தெரியவருவதாகவும் ஷி ஜின்பிங் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைமைத்துவத்தின் கீழ், சீன மக்கள் ஒன்றிணைந்து உயர் பொருளாதார வளர்ச்சியினூடாக புதிய சீனாவின் தனித்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், இலங்கை எதிர்கொண்டிருந்த கடுமையான நெருக்கடியிலிருந்து இலங்கை சமூகத்தை மீட்டெடுத்து, அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லஜனாதிபதிரணில்விக்ரமசிங்க வழி செய்துள்ளார் எனவும் சீன ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஆரம்பகாலம் முதல் சீனா இலங்கைக்கு வழங்கி வந்துள்ள ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஷி ஜின்பிங் தொடர்ச்சியாக இலங்கையுடன் சிநேபூர்வமானதும், சுமூகமானதுமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றமையையும் பாராட்டினார்.

பாகியன் பிக்குவின் இலங்கை பயணத்தைநினைவூட்டும்வகையில் 'வெள்ளைக் குதிரை' விகாரையில் இலங்கை பௌத்த மண்டபம் ஒன்றையும் தூபியொன்றையும் நிர்மாணிக்க எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்திருந்த அதேநேரம், அந்த பணிகளுக்கு சீனாவின் ஒத்துழைப்பு கிட்டுமென சீன ஜனாதிபதியும் உறுதியளித்தார்.

சீனா, மியன்மார், இலங்கை, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள், ஒரேசமுத்திரத்தைஅண்டியவர்த்தக துறையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்என்பதே இலங்கையின் நோக்கமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியிருந்த நிலையில்,அதுமிகவும்செயலாற்றல் மிக்கவிடயமெனசுட்டிக்காட்டியசீன ஜனாதிபதி, அதற்கான ஆரம்பத்தை முன்னெடுக்குமாறுஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவிடம்வலியுறுத்தினார்.

இந்துசமுத்திரத்தின்பொருளாதார கேந்திர நிலையமாக இலங்கையை அபிவிருத்திச்செய்ய வேண்டியதன் அவசியம்தொடர்பிலும்இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்துசமுத்திரத்தின்அமைதியையும் தனித்துவத்தையும் பேண இலங்கை அர்ப்பணிக்கும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஆசியாவை அபிவிருத்தி வலயமாக மாற்றும் செயற்பாடுகளுக்காக சீனாவும் இந்தியாவும்கைகோர்த்துச்செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

2048இலங்கையைஅபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றியமைப்பதே தனது இலக்காகுமென தெரிவித்த ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க, அந்த இலக்கைவெற்றிக்கொள்வதற்கு 'பெல்ட் அண்ட் ரோட்' மூன்றாவது சர்வதேச மாநாட்டில் முன்மொழியப்பட்ட எட்டு அம்சக் கொள்கை பயனுள்ளதாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து காசா எல்லைப் பகுதிகளில் ஏற்பட்டு யுத்த நிலைமை தொடர்பில்இருநாட்டுதலைவர்களும் கலந்தாலோசித்தனர். இந்தச் சந்திப்பில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்அலிசப்ரி,தேசியபாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம்பிரதானியுமானசாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சாண்ரா பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## வழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருக்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக சுற்றுச்சூழல் நீதி மையம் தொடுத்த வழக்கு தொடர்பான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்தலைவர்நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் சமத் மொராயிஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ரவீந்திரநாத் தாபரே, இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்கு விசாரணை நடைபெற்று வருவதால், மேற்படி மனுவை மீளப் பெற அனுமதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

அதன்படி, வழக்கை வாபஸ் பெற அனுமதித்த நீதிபதிகள் அமர்வு, உத்தரவிட்டது.

## 330 மில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில்ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தான் ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

வருமானத்தைஅடிப்படையாகக் கொண்ட அரச நிதி ஒருங்கிணைவு, வறுமை மற்றும் ஆபத்தான நிலைமையில்உள்ளதரப்பினருக்கு சமூகஒத்துழைப்பைவழங்குதல்,நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல், கடன் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்கள் கடன் ஸ்திரத்தன்மையை அடைவதற்கான வழிமுறைகள் ஆகும்.

இந்த இலக்குகளின் கீழ் கடன் ஸ்திரத்தன்மையை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகளை அதிகாரிகள் அவர்களின் கடன் வழங்குநர்களுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக்குழுவின் இரண்டாவது கட்டம் அதுவாகும். அதனை அடைவதுதான் இரண்டாவது இலக்காவும்உள்ளது. தற்போதைக்கு இத்துடன் நிறுத்திக்கொள்ளுங்கள் என்றார்.

## நவராத்திரி சிறப்பம்சம்



### கல்வித் தெய்வடுமே காட்டுவாய் கருணை !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா

வெள்ளைத் தாமரையில் வீணையுடன் வீற்றிருக்கும்
தெள்ளமுதே சரஸ்வதியே திரும்பிநீ பார்த்திடுவாய்
உள்ளிருக்கும் கசடனைத்தும் உருவழிய
வைத்திடுவாய்
வல்லமையே சரஸ்வதியே வணங்குகிறேன்
வரமருள்வாய்

ஏட்டிலும் இருப்பாய் பாட்டிலும் இருப்பாய்
மீட்டிடும் வீணை ஒலியிலும் இருப்பாய்
கேட்டிடும் குரல்கள் அனைத்திலும் இருப்பாய்
கேட்கிறேன் கல்வியைத் தந்திடு தாயே

வீரமொடு செல்வம் வந்தாலும் அம்மா
வெற்றியினை அடைய கல்வியது வேண்டும்
ஆற்றலுடை கல்வியினை அளித்து விடுதாயே
அனுதின முன்னைப் பணிகிறேன் அம்மா

சென்றிடு மிடமெல்லாம் சிறப்படைய வேண்டின்
சீரான கல்விதான் துணையாகும் அம்மா
நன்றாகப் படிப்பதற்கு நற்கருணை காட்டு
நாமகளே நாளுமே பணிகிறேன் அம்மா

கற்றவர் அவையில் ஏறிட வேண்டும்
கற்றவர் துணையாய் ஆகிட வேண்டும்
கசடறக் கல்வியைக் கற்றிட வேண்டும்
கல்வித் தெய்வமே காட்டுவாய் கருணை

## நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேசநாணய நிதியத்துடன் நாம் மேற்கொண்டுள்ள உடன்படிக்கை மற்றும் நீடிக்கப்பட்ட கடன் வசதியின்கீழ்இரண்டாம்தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அவசியமாக இருந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் அங்கீகாரம் நேற்று கிடைத்துள்ளது. இது குறித்து நீண்ட மீளாய்வுகள் இடம்பெற்றன. சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மட்டக் குழு, இலங்கைக்கு வருகை தந்து இரண்டு வாரங்களாக விரிவான மீளாய்வுகளை நடத்தியது. மேலும் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெறவேண்டிஇருந்தமையால், அதன்போது எங்களால் அதிகாரிகள் மட்டக்குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

அதன்படி,நாம்மொரோக்கோவில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் கூட்டத்தொடரில்இதுகுறித்துமேலும் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தினோம். அதன்போது இன்னும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் எமக்கு தெளிவுகள் பெறவேண்டியிருந்ததால், நாம் மீண்டும் இலங்கைக்கு வந்து அவர்களுடன் இணைய வழியில் பேச்சு நடத்தினோம். நேற்றிரவு (19), இந்த தீர்மானமிக்க அதிகாரிகள் மட்டக்குழுவின் இணக்கப்பாட்டுக்கு வரும் செயற்பாடு, சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் மற்றும் எமது நாட்டின் அதிகாரிகள், குறிப்பாக மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளிகள் ஆகியோருக்கிடையில்நடைபெற்றது.

இங்கு எமக்கு மிக முக்கியமான விடயங்களில் ஒன்றுதான், நாம் 2023 மார்ச் மாதம் சர்வதேச நாணயநிதியத்தின்அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் ஏற்பட்டிருந்த அனுகூலமான நிலைமைக்கு கடந்த சில வாரங்களில் ஒரு சில தடங்கல்கள்ஏற்பட்டன. சிலகுழுக்கள் இந்தக்கலந்துரையாடல்கள் குறித்து சரியான புரிதல்கள் இன்றி, இந்த அதிகாரிகள் மட்டக் குழுவின் இணக்கப்பாடு கிடைக்காமை தொடர்பில் பல்வேறு பிரதிகூலமான கருத்துகளை முன்வைத்தனர்.

அது மாத்திரமன்றி, இதன் ஊடாக பொது மக்களுக்கும் ஏனைய தரப்பினர்களுக்கும் நாம் இரண்டாவது தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வது குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் செயற்பட்டனர். ஆனால் இரண்டாவது தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வது அல்லது அதிகாரிகள் மட்டக் குழுவின் அங்கீகாரம் கிடைப்பது குறித்து எவ்வித அச்சமும் இல்லை என்று நாம் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் உறுதியாகக் கூறி வந்தோம். ஒரு அரசாங்கம் என்ற வகையில் அந்த நம்பிக்கை எமக்கு இருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவினால், இந்த அதிகாரிகள் மட்டக் குழுவின்

தொடர்ச்சி 8ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# சினோபெக்கால் பெற்றோலியத்துக்கு 40 மில்லியன் டொலர்கள் சேமிப்பாம்

## டி.வி.சாகன தகவல்



மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்களால் இலங்கையில் எரிபொருள் இறக்குமதி செயற்பாடுகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. விலை சூத்திரத்துக்கமைய விலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டாலும், 2024 ஜூன் வரை எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சாகன தெரிவித்தார்.

எரிபொருள் கொள்வனவுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 20 கோடி டொலர் கையிருப்பைப் பேணி வருவதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டி.வி.சாகன, சினோபெக் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதால் மேலும் 4 கோடி டொலரை சேமிக்க முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இம்மாதத்தின் முதல் வாரத்தில் உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் 3 - 4 சதவீதத்தால் குறைவடைந்த போதிலும், அதன் பின்னர் இஸ்ரேல் - ஹமாஸ் மோதலால் சகல பொருள்களின் விலைகளும் 4 சதவீதத்தால் மீண்டும் அதிகரித்துள்ளன. இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் ஆகிய நாடுகள் எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகள் அல்ல. எவ்வாறிருப்பினும் ஈரான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் அறிவிப்புக்களை அவதானிக்கும் போது எரிபொருள்கள் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது.

ஒருபுறம் இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேலுக்கான எரிபொருள் விநியோகத்தை முழுமையாக நிறுத்தியுள்ளன. மறுபுறம் அமெரிக்கா, வெனிசுலாவுக்கான விநியோகத்தின் அளவைக் குறைத்துள்ளது. இதன் காரணமாக எரிபொருள் சந்தை நிலைவரம் தொடர்பில் பகுப்பாய்வு செய்வது கடினமாகவுள்ளது.

எவ்வாறிருப்பினும் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட முன்னரே நாம் 2024 ஜூன் வரை தேவையான எரிபொருளுக்கான விலைமனு கோரலை நிறைவு செய்து, முற்பதிவு செய்திருக்கின்றோம். அது மாத்திரமின்றி எரிபொருள் கொள்வனவுக்காக 200 மில்லியன் டொலர் கையிருப்பினையும் பேணி வருகின்றோம்.

2022இல் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றிடமிருந்து சுமார் 100 பில்லியன் ரூபா கடன் பெற்று எரிபொருள்களை இறக்குமதி செய்தோம். இதனால் மாதாந்தம் வங்கிகளுக்கு வட்டி மாத்திரம் 3 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறிருப்பினும் தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யப்படுவதால் அந்த நெருக்கடி தீர்க்கப்பட்டுள்ளது. எரிபொருள்களின் விலைகளும் வெளிப்படைதன்மையுடன் விலை சூத்திரத்துக்கமையவே தீர்மானிக்கப்படும். அத்தோடு எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையங்களும் தொடர்ச்சியாக இயக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமையால் இம்மாதத்தில் மாத்திரம் 40 மில்லியன் டொலர்களை சேமிக்க முடிந்துள்ளது. சினோபெக் நிறுவனத்தால் எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையால் இந்தத் தொகையை சேமிக்க முடிந்துள்ளது. அதற்கமைய ஏனைய இரு நிறுவனங்களும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் வருடத்துக்கு ஒரு நிறுவனத்தால் 400 - 500 மில்லியன் டொலர்களை சேமிக்க முடியும் என்று நம்புகின்றோம்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளில் களஞ்சிய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு குழாய் கட்டமைப்பு அவசியமாகும். ஐ.ஓ.சி. நிறுவனத்திடமுள்ள 14 தாங்கிகளுக்கு குழாய் கட்டமைப்புக்கள் ஏற்கனவே காணப்படுகின்றன. ஆனால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமுள்ள 24 தாங்கிகள் மற்றும் திருகோணமலை பெற்றோலிய முனையத்திடம் காணப்படும் தாங்கிகளுக்கு குழாய் கட்டமைப்புக்களை அமைக்க வேண்டியுள்ளது.

இதற்கு பாரிய முதலீடு தேவையாகும். தற்போது இது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், ஐ.ஓ.சி. நிறுவனமும் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றன. அதற்கமைய இரு தரப்பும் இணைந்து குழாய் கட்டமைப்புக்களை நிறுவிய பின்னர் அந்த நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

இதற்கு சுமார் 10 - 20 மில்லியன் டொலர் முதலீடு தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் ஆர்.எம்.பார்க் நிறுவனம் இலங்கையில் வைப்பொன்றைப் பேணி வருகிறது. விரைவில் அனுமதிபத்திரத்துக்கான கட்டணத்தையும் செலுத்திய பின்னர் 45 நாள்களுக்குள் அந்த நிறுவனத்தின் முதலாவது கப்பல் நாட்டை வந்தடையும். ஆஸ்திரேலிய யுனைடட் நிறுவனம் இன்னும் கால அவகாசத்தை கோரியுள்ளது.

உலகில் முதல் 10 இடங்களிலுள்ள எரிபொருள் விநியோகத்தர்களே இலங்கைக்கு எரிபொருள்களை விநியோகிக்கின்றனர். எனவே விலைமனுகோரலில் வெற்றிபெற்று அவர்கள் எரிபொருளை விநியோகிக்காமல் இருக்க மாட்டார்கள். அதன் அடிப்படையில் இலங்கைக்கு எதிர்வரும் 2024 ஜூன் வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. மன்னார் காற்றலை மின் உற்பத்தி நிலைய பணிகள் இறுதி கட்டத்திலுள்ளன. முன்மொழிவுக்கான கோரிக்கைவிடுக்கப்பட்டு இறுதிசெய்யப்பட்டுள்ளது. தற்போது விலையை இறுதி செய்ய வேண்டியுள்ளது. 2025 ஜனவரியாகும் போது 500 மெகாவோல்ட் மின் உற்பத்தியை நிறைவுசெய்வதற்கு காலவரையறை வழங்கப்பட்டுள்ளது. - என்றார்.(05)

# ஜூலை மாதத்துக்கு பின்னர் சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

## சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு



குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு வழங்கப்படும் சமுர்த்தி நலன்புரி கொடுப்பன வுகள் நெருக்கடி க்குள்ளாக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதத்துக்கு பின்னர் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. ஆகவே நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களுக்கு நாடாளுமன்ற அனுமதி கோரல், சுங்க கட்டளைச்சட்டம் மீதான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு காலங்களில் சமுர்த்தி கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன. இந்த சமுர்த்தி கொடுப்பனவுகளில் பலர் கொடுப்பனவைப் பெறத் தகுதியற்றவர்களாகக் கருதி பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன. சமுர்த்தி கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகுதியுள்ளவர்கள் பெரும்பாலானோர் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் சமுர்த்தி கொடுப்பனவுகளை நலன்புரி கொடுப்பனவுகளாக வழங்குவதாக அரசு அறிவித்து இதனை வழங்குவதற்கான பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டபோது இவற்றில் மிகவும் வறிய நிலையில் உள்ள பலரின் பெயர் கள் இடம்பெறவில்லை. இதனால் பல இடங்களில் மக்களின் போராட்டங்கள் நடைபெற்றன.

மன்னாரிலும் போராட்டம் நடைபெற்றது. இதனையடுத்து நலன்புரி கொடுப்பனவு தொடர்பில் மீளாய்வு செய்யுமாறு

அரசால் அறிவிக்கப்பட்டது. அவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டபோது குறைந்த வருமானத்தை உறுதிசெய்யக்கூடிய வகையில் அரசின் செயல்திட்டங்கள் இருக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க, இந்த நலன்புரி கொடுப்பனவுகள் அரசால் கடந்த ஜூலை மாதம் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் இன்றுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலையேற்றங்களால் மக்கள் சிரமமான நிலையில் வாழ்கின்றார்கள். எனவே நலன்புரிக்கொடுப்பனவு என்பது மக்களுக்கு அவசியம். எனவே மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதால் நலன்புரிக்கொடுப்பனவை மீண்டும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை நலன்புரிக்கொடுப்பனவை பெற மீளாய்வுக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். - என்றார். (05)

# மதுபான போத்தல் போலிஸ்டிக்கர் மோசடி: பல பில்லியன் ரூபா அரச வருவாய் இழப்பு

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அமுல்படுத்தி நடுத்தர மக்களைத் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாக்கும் அரசாங்கம், ஊழல் ஒழிப்பு தொடர்பில் அவதானம் செலுத்தவில்லை. அரசாங்கத்துக்கு சார்பான மதுபான உற்பத்தி நிறுவனத்தின் போலி ஸ்டிக்கர் மோசடியால் பல பில்லியன் ரூபா வருமானத்தை அரசு இழந்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களுக்கு நாடாளுமன்ற அனுமதி கோரல், சுங்க வரி கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் நடைமுறையில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை. அரச வரி வருமானம் போதுமான இலக்கை அடையாத காரணத்தால் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நீடிக்கப்பட்ட தவணை வழங்கல் பிற்போடப்பட்டுள்ளது. வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கமைய புதிய சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. சட்டங்கள் திருத்தம் செய்யப்படுகிறது. ஆனால் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு சாத்தியமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமை அரசநிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்படுகின்றன. மறுசீரமைப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு இலாபமீட்டும் நிறுவனங்களும் விற்கப்படுகின்றன. ஆனால் சர்வதேச நாணய நிதியம் கூறும் பிரதான நிபந்தனையான ஊழல் மோசடி இல்லாதொழிக்கப்படவில்லை. ஊழல்கள் தொடர்கின்றன. கலால் வரி திணைக்களத்தால் போத்தல்களில் போலியாக ஒட்டப்படும் ஸ்ரிக்கர்களை தடுக்க முடியவில்லை. இந்த மோசடியால் பில்லியன் கணக்கான அரச வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

அர்ஜுன அலோசியஸின் மதுபான உற்பத்தி நிறுவனங்களே இவ்வாறு முறையற்றவகையில் செயற்படுகின்றன. இப்படி செய்தால் மக்களுக்கு கிடைக்க வேண்டிய வரிகள் கிடைக்காது. இந்த மக்கள் மீதான சுமைகள் குறைக்கப்படவில்லை. பொருளாதார பாதிப்பு மேலும் தீவிரமடையும், அரச சேவையாளர்களும், தனியார் துறையினரும், தோட்டத் தொழிலாளர்களும் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்துகிறோம். - என்றார்.(05)

# தேங்காய் வியாபாரியின் வீட்டுக்குள் நுழைந்த திருடர்களால் ஆயுதமுனையில் 2 கோடி ரூபா பணம், நகைகள் கொள்ளை

*கூரிய ஆயுதங்களுடன் வீட்டினுள் நுழைந்த சிலர், அங்கிருந்தவர்களை பயமுறுத்தி, சுமார் 200 லட்சம் ரூபா பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.*

*மாதம்பை தம்பகல்ல பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*கொள்ளையர்கள் வீட்டு உரிமையாளர்களைப் பயமுறுத்தி ஓர் அறையில் அவர்களை அடைத்தே இவ்வாறு கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.*

*தேங்காய் வியாபாரி ஒருவரின் வீட்டில் புதன்கிழமை மாலை 7 மணியளவில் வேனில் வந்த நால்வர் இவ்வாறு கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.*

*மேலும், வாகனத்தின் திறப்புக்களையும் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)*




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளுக்கொரு நீதியா?

இஸ்ரேல் – பலஸ்தீனப் போர் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இஸ்ரேலின் போர்க் குற்றங்கள் நாடாளுமன்றத்தில்கடுமையாகக்கண்டிக்கப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு இந்தப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று அரசியல் தலைவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

இவற்றையொட்டி தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை மிக முக்கியமானது. கவனத்திற்குரியது. இஸ்ரேல் – பலஸ்தீனப் போர் தொடர்பில் இன்று அக்கறைப்படுபவர்களில் பலர் அன்று, தமிழ் மக்கள் மீது இலங்கைப் படையினர் இதேபோன்ற குற்றங்களை நிகழ்த்தியபோது, சொந்த நாட்டிலேயே மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்கப்பட்டபோது எங்கே போயிருந்தார்கள்? அவர்களின் மனிதாபினமானமும் மனச்சாட்சியும் அன்று செத்துக் கிடந்தனவா? என்பது போன்று கேள்வி எழுப்பியுள்ளார் அவர்.

”இஸ்ரேல், பலஸ்தீன் பகுதிகளில் இடம்பெறும் கொலைகளுக்காக எமது கண்டனங்களை தெரிவிக்கின்றோம். அங்கு பெருமளவில் மனித அவலங்கள் இடம்பெற்று வருகின்றன. சிறிய நாடாக இருந்தாலும் நாங்கள் ஒன்றும் தெரியாதது போன்று நடு நிலையாக இருந்துவிட முடியாது.

வன்முறைகளை எதிர்க்க வேண்டும். இரு தரப்பினரும் யுத்தத்தை நிறுத்தி மனித அவலங்களை நிறுத்த நடவடிக்கைஎடுக்கவேண்டும்.நீண்டகாலமாகநாங்களும் இவ்வாறான போர் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ளோம். இதற்கு யார் பொறுப்பாளிகள். அத்துமீறியவர்களையே நாங்கள் இனங்கான வேண்டும்.

நாடுகள் வன்முறைகளின் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முயல்கின்றன. இந்த காலத்தில் அதற்கு இடமளிக்க முடியுமா? அதனை ஏன் தீர்த்து வைக்க முடியவில்லை. பேச்சு, மத்தியஸ்தம் வகித்தல் ஆகியன மூலம் தீர்வுகளை காணலாம்.

வைத்தியசாலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது நாட்டில் இடம்பெற்ற போரின் போதும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

காஸாவில் வைத்தியசாலை மீதான தாக்குதலை கண்டிப்பவர்கள் இங்கே வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் எதுவும் கதைக்கவில்லை.

இங்கேயும் அரச பயங்கரவாதமே இருந்தது. எவ்வகையாக வன்முறையாக இருந்தாலும் அவை கண்டனத்திற்குரியவையே. இஸ்ரேல் காஸாவை விட்டு விலக வேண்டும். எவராக இருந்தாலும் மக்கள் உயிர்களை பறிக்க எந்த உரிமையும் கிடையாது.

இங்கே சிலர் இரட்டை வேடத்துடன் செயற்படுகின்றனர். அரசியல் ரீதியான பிரச்சினையே பல நாடுகளில் நடக்கின்றன. அவற்றை அரசியல் ரீதியில் தீர்க்க முடியும். இங்கேயும் அதே நிலைமையே இருக்கின்றது.

அரசியல் தீர்வாக இராணுவ நடவடிக்கைகள் அமைய முடியாது என்று மஹிந்த ராஜபக்ஷ கூறினார். ஆனால் இறுதியில் அவர் இராணுவ தீர்வையே முன்னெடுத்தார்.

எவ்வாறாயினும் இவ்வாறான வன்முறைகளை அனுமதிக்க முடியாது. இவற்றை கண்டிக்க வேண்டும். துன்பப்படும் மக்கள் யாராக இருந்தாலும் நாங்கள் ஒற்றுமையுடன் அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும்” என்றார்.

அவர் கூ–றியதைப் போன்று இன்று பலஸ்தீன மக்களுக்காகக் கூக்குரலிடும் பலர், எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்படப் பலரும் அன்று தமிழ் மக்களுக்கு எதிராக அரசு போர்க் குற்றங்களைக் கட்டவிழ்த்து விட்டிருந்தபோது வாய்மூடி மௌனிகளாக இருந்தவர்களே. தங்களுக்கு என்று வரும்போது ஒரு நியாயம் மற்றவர்களுக்கு என்றால் வேறு நியாயம் என்று நடக்கும் இத்தகைய அரசியல்வாதிகளால்தான் இந்த நாடு நாசமாகின்றது.




## சீனாவின் கடன் மறுசீரமைப்பு

உபுல் யோசப் பெர்னான்டோ



இலங்கையில் சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டம் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ், சீன 'பெல்ட் அண்ட் ரோட்' முன்முயற்சி மாநாடுகளின் வாய்புக்களை இலங்கை பயன்படுத்தியது. 2017ஆம் ஆண்டு 'சீனா பெல்ட் அண்ட் ரோட்' மன்றத்தைக் கூட்டியபோதும் இலங்கை சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். இந்த முக்கியமான சந்திப்பின்போது, சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்கும் பாக்கியமும் ரணிலுக்கு கிடைத்தது.

ரணிலின் பயணத்தின்போது, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பான அடிப்படை உடன்படிக்கை குறித்து ஆராயப்பட்டது. 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தின் 10ஆவது ஆண்டு மாநாட்டில் ஜனாதிபதியாக ரணில் தனது நாட்டை இப்போது பிரதிநிதித்துவப்படுத்துகிறார். சீன அதிபருடன் ரணிலின் கலந்துரையாடலின் குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல் தெரியவில்லை. சீன ஜனாதிபதியுடனான ரணிலின் பேச்சு கடன் மறுசீரமைப்பு தொடர்பான விடயங்களை மையப்படுத்தி




யதாக இருக்கும் என்றே ஆளும் தரப்புத் தெரிவித்துள்ளது.

ரணில் சீனாவிற்குப் புறப்படுவதற்கு முன்பாக, இலங்கையின் கடனை மறுசீரமைப்பதற்கான பூர்வாங்க திட்டத்தை- முன்னோடியில்லாத நடவடிக்கையை - சீனா அறிவித்தது. இந்த எதிர்பாராத நடவடிக்கை ஆச்சரியமான பன்னாட்டு நாணய நிதியம், பாரிஸ் கிளப், இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுக்கு ஆச்சரிய அலைகளை அனுப்பியது. இந்து மாகடல் கரையோர நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் கொழும்புக்கு வந்திருந்தபோதுசீனாவின் இந்த அறிவிப்பு குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாணய நிதியம் தனது முதல் தவணைக் கடனை இலங்கைக்கு வழங்கியபோதே இந்தியா தனது கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான முதல் கடிதத்தை அதிகாரபூர்வமாக அறிவித்துவிட்டது. ஆனால் அந்த நேரத்தில் சீனா அசௌகரியத்தில் இருந்தது. கடன் மறுசீரமைப்பு தொடர்பான சீனாவின் உறுதியளிப்புக் கடிதம் இந்தியாவின் கடிதத்திற்குப் பிறகே சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கப்பட்டது. இம்முறை ஜெய்ங்கர் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து இந்தியா, பாரிஸ் கிளப் மற்றும் ஜப்பான் கலந்துரையாடும் போது இலங்கையுடனான மறுசீரமைப்பு உடன்படிக்கையை சீனா அறிவித்தது. இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால், மொரோக்கோவில் இருந்து விடுத்த அறிக்கையில் சீனாவின் அறிக்கை இலங்கையை மிகவும் ஆச்சரியப்படுத்தியுள்ளது என்று தெரிவித்திருந்தார். ஆனால் உண்மையான கள யதார்த்தம் என்னவென்றால் அந்த அறிக்கை இலங்கையை ஆச்சரியப்படுத்தவில்லை என்பதுதான். சீனா எக்ஸிம் வங்கியின் இரண்டாவது கட்டளைத் தளபதி இலங்கைக்கு வந்து மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளரை சில மாதங்களுக்கு முன்னர் இரகசியமாகச் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தார். வழக்க மாக, மத்திய வங்கி யின் மற்ற அதிகாரிகளும் இதுபோன்ற கூட்டங்களில் பங்கேற்பார்கள், ஆனால் இந்தச் சந்திப்பு மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளருடன் மட்டு மே இருந்தது. எனவே கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனாவுக்கும் இலங்கைக்கும் இடை யில் எட்டப்பட்ட உடன்படிக்கையின் அறிவிப்பால் தாம் ஆச்சரியமடைந்துள்ளார் என்ற மத்திய வங்கி ஆளுநரின் கதை ஏற்றுக் கொள்ள முடியாதது.

மறுபுறம் சீன அறிவிப்பு தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் வெளியிட்ட அறிக்கைக் கும் இது தொடர்பில் நிதியமைச்சுவிடுத்துள்ள அறிவிப்புக்கும் இடையில் பெரும் முரண்பாடு காணப்படுகின்றது. சீனாவின் அறிவிப்பை வரவேற்ற நிதி அமைச்சு பாராட்டுத் தெரிவித்ததோடு, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாவது தவணையைப் பெறுவதற்கு இது பேருதவியாக இருக்கும் என்றும் கூறியது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல்தவணையைப்பெறுவதற்கு இலங்கை அரசு இந்தியாவைப் பயன்படுத்தியது. இரண்டாவது தவணையைப் பெற சீனா பயன்படுத்தப்படுகிறது. சிறிலங்கா சீனாவை தான் விரும்பியவாறு பயன்படுத்துகிறதா, அல்லது சீனா இலங்கையைத் தான் விரும்பும் வழியில் பயன்படுத்துகிறதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

கடன் மறுசீரமைப்புச் செயல் முறைக்கு நெருக்கமான உயர் அதிகாரிகள் சிலர் தமது பெயர் விவரங்கள் வெளியிடப்படக் கூடாது என்கிற நபந்தனையுடன், சீன எக்ஸிம் வங்கி அறிவித்த கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பில் பின்வரும் முக்கிய விடயங்களைத் தெரிவித்தனர்.

1. மூலதனம் அல்லது வட்டி மீது ஹேர்கட் இல்லை.

2. அனைத்துக் கடன்களில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கும் பெரிய கடன்களையும், ஏப்ரல்'24 இல் முடிவடையும் 2 ஆண்டு காலத்திற்குத் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை.

3. மீதிக் கடன்களுக்கு இன்னும் 1 வருட கால அவகாசம் வழங்கப்படவேண்டும், அதன் பிறகு கடன்களை திருப்புச் செலுத்துவது தொடர்பாக இறுதி முடிவு செய்யப்படும்.

இந்த நிலையில், கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் சீன அதிபருடனான ரணிலின் சந்திப்பு இந்த விடயத்தில் இன்னும் மாற்றங்கள் எதையாவது கொண்டு வருமா, அது மற்றைய கடன் வழங்குநர்குளக்கு ஏற்புடையதாக இருக்குமா என்பது இன்னமும் தெரியவரவில்லை

# ஊடகங்களில் வெளியாகும் எதிர்மறையான செய்தி குறித்து விசாரிக்க சபாநாயகருக்கு அதிகாரம் உண்டு

## பிரதமர் தினேஷ் சுட்டிக்காட்டு



சபா பீடத்திலிருந்து சபாநாயகர் மேற்கொள்ளும் தீர்மானங்கள் தொடர்பில் எதிர்மறையான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தால் அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து அதனை சரிசெய்யும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

போதைப் பொருளோடு சம்பந்தப்பட்ட ஒருவரை பாதுகாப்பதற்காகவே அரசமைப்பு பேரவை செயற்பட்டுள்ளது என்றும், அதனாலேயே பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்பை அனுமதிக்கவில்லை என்றும் செய்தி வெளியிட்ட அரச பத்திரிகைகளின் ஆசிரியர்களைநாடாளுமன்றத்திற்குஅழைத்து விசாரிக்க வேண்டும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரச பத்திரிகைகள் இரண்டில் போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட ஒருவரை பாதுகாப்பதற்காகவே அரசமைப்பு பேரவை செயற்பட்டுள்ளது என்றும், இதனாலேயே பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்பை அனுமதிக்கவில்லை என்றும் நேரடியாக தலைப்பு செய்திகள் ஊடாக குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

இந்த பேரவையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டோர் உள்ளனர். இது தொடர்பில் முழு சபையின் சிறப்புரிமைகளும் மீறப்பட்டுள்ளன. இது பொய்யா? உண்மையா? என்று கூற வேண்டும் என்பதுடன், அந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களை நாடாளுமன்றத்திற்கு அழைத்துவிசாரணைநடத்தவேண்டும். – என்றார். இதற்கு பிரதமர் தொடர்ந்து பதிலளிக்கையில்–

சபா பீடத்திலிருந்து சபாநாயகர் மேற்கொள்ளும் தீர்மானங்கள் தொடர்பில் எதிர்மறையான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தால் அது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து அதனை சரி செய்யும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது.

ஊடகங்களில் பல்வேறு விடயங்கள் வெளியாகின்றன. சபைக்கு சபாநாயகரே தலைமை வகிக்கின்றார். இதன்படி அவர் தீர்மானங்களை எடுக்கலாம். அது தொடர்பில் அந்த பத்திரிகைகளை அழைத்து அதனை திருத்தம் செய்யும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஒரு முகாமைத்துவத்துக்காக இடமளிக்கும் சட்டம் ஒன்றுக்கும் இடமளித்துள்ளோம் . இந்தக் கேள்வியை எழுப்பியமைக்காக உதய கம்மன்பில எம்.பிக்கு நன்றி தெரிவிக்கிறேன். – என்றார் . (05)

# அமைச்சர் கெஹலியவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை கண்டி மேல் நீதிமன்றத்தில் டிசெம்பர் 12 ஆம் திகதி ஆஜராகுமாறு கண்டி மேல் நீதிமன்ற நீதிவான் தர்ஷிகா விமலசிறி உத்தரவிட்டுள்ளார்.

1999 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது நாவலப்பிட்டிய நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் பிண்ணனி தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணையின் நிமித்தம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி குருந்துவத்தை பிரதேசத்தில் தற்போதைய சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகிய இரு குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட மூவர் காயமடைந்தனர்.

இதையடுத்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அப்துல் காதர், பீட்டர் காத்தகெதர, நந்தன சிசிர குமார, துவான் நிஸாம் மிஸ்கின் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதில் அப்துல்காதர் மற்றும் துவான் நிஸாம் மிஸ்கின் ஆகிய இருவரும் உயிரிழந்த நிலையில் கெஹலிய ரம்புக்வெல்ல குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாக தமது சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

இதுதொடர்பானவழக்கு2000ஆம்ஆண்டுஜுலை24ஆம் திகதி கண்டி மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தொடரப்பட்டபோது குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டு இந்த வழக்கு மேல் நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டது.

அந்த வழக்கு தற்பொழுது விசாரணைக்கு வந்துள்ளது. இந்த வழக்கின் சாட்சிகளாக நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் வைத்தியர் கே.ஆர். சசேந்திரன் மற்றும் அரச இரசாயன பரீட்சகர் மெண்டிஸ் உள்ளிட்ட 55 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (05)







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Roty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் சுற்றிவளைப்புகளில் 28 ஆயிரத்து 441 பேர் கைது

## மதுவரித் திணைக்களம் தகவல்

விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கபெற்ற முறைப்பாட்டுக்கு அமைய இந்த வருடம் ஜனவரிமுதலாம்திகதி முதல்கடந்தசெப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 28 ஆயிரம் விசேட சுற்றிவளைப்புகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது 28 ஆயிரத்து 441பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் இலங்கை மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மதுவரித் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

கடந்த 9 மாதங்களுக்குள் நாடளாவிய ரீதியில் 28 ஆயிரம் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது 3 ஆயிரத்து 756 பெண்கள் உட்பட 28 ஆயிரத்து 441பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சுற்றிவளைப்புகளின் போது திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 26 கோடி ரூபாவை அண்மித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சுற்றிவளைப்புகள் நாடளாவிய ரீதியில் 57 மதுவரி நிலையங்கள், 05 மதுவரி விசேட அதிரடிப் பிரிவுகள் மற்றும் கலால் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தால்இணைந்துமேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளை உள்ளடக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு மதுபானம் போதைப்பொருள் மற்றும் புகையிலை தொடர்பில்குற்றவியல்நீதிமன்றத்தில்வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து நீதிமன்றம் 122 மில்லியன்ரூபாஅபராதம்விதித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் மது விற்பனைக்கான கலால் உரிமம்பெற்ற இடங்கள் தொடர்பாக 3,415 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கலால் உரிமம் பெற்ற இடங்களில் குற்றங்களுக்காக இதுவரை விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை 98 மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளது.

கணிசமான எண்ணிக்கையிலான இந்த சோதனைகள் பொதுமக்கள் நேரடியாக வழங்கியமுறைப்பாடுகள்மற்றும்தகவல்களின் அடிப்படையிலும் கலால் தலைமையகத்தில் நிறுவப்பட்ட 1913 என்ற தொலைபேசி எண் மூலம் கலால் செயற்பாட்டு அறை மூலமாகவும் நடத்தப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (05)

## இந்தியக் கடற்படையினரின் அதி நவீன இலகுரக ஹெலிகொப்டர் இலங்கையில்

இலங்கை விமானப்படை விமானிகள் மற்றும் இலங்கை கடற்படைக்கப்பல்கள்பங்கேற்கும், ஹெலிகொப்டர் தாங்கி கப்பல்களின் நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகளுக்காக இந்தியக் கடற்படையின் அதி நவீன இலகு ரக ஹெலிகொப்டர் 2023 ஒக்ரோபர் 19 ஆம் திகதி கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை விமானப்படைத் தளத்தை வந்தடைந்துள்ளது.

இந்தப் பயிற்சிகளின் மூலமாக இலங்கை விமானப்படை விமானிகள் அதி நவீன இலகு ரக ஹெலிகொப்டர்களை கையாளும் வாய்ப்புகளுடன் துணை விமானி அனுபவத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். மேலும், இலங்கை கடற்படைக் கப்பல்களில் தரையிறங்கும் பயிற்சிகளைமுன்னெடுப்பதற்கும் இந்த பயிற்சி அணியினர் திட்டமிட்டுள்ளனர்.

அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் ஒரு பகுதியாக இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அயல் நாடுகளின் திறன்விருத்தி செயற்பாட்டுத்திட்டத்தின் ஓரங்கமாக இந்த பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த ஈடுபாட்டின் மூலமாக இருதரப்பினரிடையிலுமான இயங்குதிறன் மேலும் வலுவடையும் அதேநேரம் கடல் மார்க்கமான செயற்பாடுகளில் சுமுகமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் வழிவகுக்கப்படுகின்றது. மிகவும் முக்கியமான பயிற்சிகளாகக் கருதப்படும் இலங்கைகடற்படையினருக்கான கப்பலில் விமானங்களை தரையிறக்குதல்மற்றும்இலங்கை விமானப் படையினருக்கான துணைவிமானி அனுபவங்கள் ஆகிய பயிற்சிகளை வழங்கு-வதற்காக 2022 மார்ச் 23-31 முதல் இலங்கையில் அதிநவீன இலகு ரக ஹெலிகொப்டர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவது நினைவில் கொள்ளத்தக்கது. இரு நாடுகளுக்குமிடையிலான புராதன நட்புறவின் ஊடாக எட்டப்பட்ட நெருக்கமான உறவுகளுக்குஇருநாடுகளினதும் ஆயுதப் படைகள் இடையிலான உயர் மட்ட ஒன்றிணைவு மற்றும் புரிந்துணர்வு மேலும் வலுச்சேர்க்கின்றது. (05)

## ஒரே இலக்கம் கொண்ட 5000 ரூபா பெறுமதியான ஐந்து போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது

ஒரே இலக்கத்தைக் கொண்ட 5000 ரூபா பெறுமதியான 5 போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கதிர்காமம் பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு திஸ்ஸமஹாராம பொலி-ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தெபரவெளகெமுனுபுரபிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் இரண்டுபோலி5000ரூபா நாணயத்தாள்கள் மற்றும் அச்சிடும்இயந்திரத்துடன்கைது செய்யப்பட்டார்எனவும் பாடசாலையொன்றில் ஆய்வுகூட அதிகாரியாகக்கடமையாற்றிவந்தார் என வும், இந்த சம்பவத்தின் காரணமாக பணி இடைநீக்கம் செய்யப்பட்டார் எனவும் திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

## ஐந்து நாள்களேயான சிசு பேருவளையில் இறப்பு

பேருவளை பிரதேசத்தில் பிறந்து ஐந்துநாள்களேயானகுழந்தைசுகவீனமடைந்ததையடுத்து, நாகொடை போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்ட நிலையில், சிசு ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். பேருவளைபிரதேசசைனாபோர்ட்குச்சிமலை பகுதியைச்சேர்ந்த பெற்றோரின் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

சிசுவின் பெற்றோர் திருமணமாகி ஆறு வருடங்கள் கடந்த நிலையில் பிறந்த முதல் குழந்தை எனவும் இதுவரை பெயர் சூட்டப்படவில்லை எனவும் பேருவளை பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் பேருவளை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
















4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கப்பாட்டுக்கு, அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் இரண்டாவது தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெற்றுக்கொள்ளும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நடவடிக்கைகளுக்கு வழங்கிய தலைமைத் துவம் குறித்து நான் இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டும். இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்தீரப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு ஜனாதிபதி கடந்த காலங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள், வழங்கிய தலைமைத்துவம் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் உட்பட மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகள் வழங்கிய பங்களிப்புகள் மாத்திரமன்றி, நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் வழங்கிய ஆதரவுகள் மற்றும் அர்ப்பணிப்புகள் இந்தப் பணிகளை முன்னெடுக்க எமக்கு மிகவும் இலகுவாக அமைந்தது.

இந்த அதிகாரிகள் மட்டக்குழுவின் இணக்கப்பாடு, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பலதரப்பு கடன் வழங்குனர்களுக்கு எஞ்சிய தவணைகளைச் செலுத்துவதற்கும் அதன் மூலம் சர்வதேச தரப்பினர்களுடன் கடன் மறுசீரமைமைபைத் துரிதப்படுத்துவதற்கும் உதவும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாடுகளையும் விரைவில் நிறைவு செய்யலாம். ஊழலைக் குறைத்து வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இலங்கையின் பொருளாதாரத்தை தற் போதைய நிலைக்கு கொண்டு வந்ததற்காக சர்வதேச நாணய நிதியம் தமது பாராட்டைத் தெரிவித்தது. இதன் ஊடாக இலங்கை மீதான சர்வதேச நம்பிக்கை மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கேற்ப, இந்நாட்டின் பொருளாதாரம் மேலும் ஸ்திரமான நிலைக்குச் செல்ல வேண்டும் என்றார்.

## 6.5 கிலோ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களுடைன் கைது செய்யப்பட்ட இந்தியர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். முகமது பைசல், (வயது 26) என்ற அவர் மலக்குடலுக்குள் தங்கத்தை மறைத்து வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இலங்கையிலிருந்து நேற்றுக்காலை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் வந்திறங்கிய சிறிது நேரத்தில் கைது செய்யப்பட்டனர். அண்மைய நாட்களாக திருவனந்தபுரம் ஊடாக இலங்கையர்களின் வரவு அதிகரித்தைத் தொடர்ந்து உசாரான அதிகாரிகள், புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்தத் தங்கக் கடத்தலை முறியடித்துள்ளனர்.

அதிகாரிகளின் கருத்துப்படி குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் திருப்பூரில் உள்ள ஆடை உற்பத்தி அலகுகளுடன் வணிகத்தில் ஈடுபடுபவர்கள். இவர்கள் 13 பேரும் ஒரே கும்பலைச் சேர்ந்தவர்களா என்பது அடுத்தடுத்த விசாரணைகளில் மட்டுமே உறுதி செய்யப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருவனந்தபுரம் விமான நிலையம் ஜூலை 2020 முதலே தங்கக் கடத்தலின் மையமாக இருக்கின்றது என்கிற குற்றச்சாட்டு இருந்து வந்தது. கேரள முதல்வர் பினராயி விஜயனின் முன்னாள் முதன்மைச் செயலாளர் எம் சிவசங்கர், தூதரக வழித்தடத்தை தவறாகப் பயன்படுத்திய கடத்தல் கும்பலுடன் தொடர்புடையவர் என்று கூறப்படுகிறது. பின்னர் சிவசங்கர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு சிறை தண்டனை அனுபவித்தார்.

# பல வைத்தியசாலைகளில் மருந்து விநியோக நெருக்கடி

மருந்தாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக சில வைத்தியசாலைகளில் மருந்து விநியோகத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது,

தற்போது நிலவும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக மருந்தாளர்கள் பலர் வெளி நாடுகளுக்கு வேலை தேடிச் செல்வது பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

மருந்தாளர் பற்றாக்குறையினால் வெளவேறு தரங்களில் சேவையாற்றும் ஊழியர்கள், மருந்து விநியோகத்தை முன்னெடுக்கின்றார்கள். இந்த நிலைமை தொடர்ந்தால் மருந்து விநியோக முறைமையில் பாரிய அபாயம் ஏற்படும்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் பல்கலைக்கழகங்களில் மருந்தாளருக்கான கற்றல் நடவடிக்கைகளை நிறைவு செய்யும் மாணவர்கள், வெள;வேறு தொழில்களை தேடிச்செல்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

அத்துடன், சுகாதார அமைச்சும் மருந்தாளர்களை சேவையில் இணைத்துக்கொள்வதை நிறுத்தியுள்ளமை தற்போதைய நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என்றார்.

## படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் மற்றும் திருக்கோவில் வலய உதவிகல்வி பணிOப்பாளர் எஸ்.கங்காதரன் திருக்கோவில் வலையக்கல்வி அலுவலக ஆசிரியர் ஆலோசகர் எஸ். ஷம்சன் , பொத்துவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் கே.உதயகுமார் ,திருக்கோவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். ரவீந்திரன் மற்றும் தாண்டியடி விக்னேஸ்வரா மகாவித்தியாலய அதிபர் எம். தர்மசீலன்

தாண்டியடி திருபதி வித்தியாலய அதிபர் வி.உதயகுமார் திருக்கோவில் விஸ்வதுளசி வித்தியாலய அதிபர் ஜெ.வுர்னோ தம்பிலுவில் மத்திய மகாவித்தியால அதிபர் திருமதி கோமலாதேவி மற்றும் திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்தி திட்டமிடல் உத்தியோத்தர் எஸ்பி.புண்ணியசீலன் ஆகியோர் இவ்நிகழ்வில் கலந்துகொண்டனர்...

## விகாரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.




# 242,000 பேருக்கு அவசியமான உணவுப்பொருள் உதவிகள் அடுத்த சில வாரங்களில் கிட்டுமாம்

## உலக உணவுத்திட்டம் நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் உணவுப்பாதுகாப்பின்மை நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் 2 லட்சத்து 42 ஆயிரம் பேருக்கு அவசியமான உணவுப்பொருள் உதவிகளை எதிர்வரும் சில வாரங்களில் வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

தீவிர பொருளாதார நெருக்கடியை அடுத்து கடந்த காலங்களில் நாட்டின் உணவுப்பாதுகாப்பு நிலை வெகுவாக மோசமடைந்தது. அதனால் ஏற்படக்கூடிய குறுங்கால மற்றும் நீண்டகாலப் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புக்களில் ஒன்றான உலக உணவுத்திட்டம் கடந்த ஒருவருடகாலமாக நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு அவசியமானமனிதாபிமான உதவிகளை வழங்கிவருகின்றது.

அதன்படி இவ்வாண்டு கடந்த செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 2 மில்லியனுக்கும்மேற்பட்டோருக்கு அவசியமான உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன எனவும், நாட்டின்மொத்தசனத்தொகையில் சுமார் 3.9 மில்லியன் மக்கள் ஓரளவு உணவுப்பாதுகாப்பின்மை நிலைக்கு முகங்கொடுத்துள்ளனர் எனவும் மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் உலக உணவுத்திட்டம் தெரிவித்திருக்கின்றது.

குறிப்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் 5 வயதுக்குக் குறைந்த 2 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கும் அவசியமான திரிபோா வழங்கப்பட்டதாக சுட்டிக்காட்டியிருக்கும் உலக உணவுத்திட்டம், நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களை அடிப்படையாகக்கொண்டு'குடும்பமட்டத்திலான உணவுப்பாதுகாப்பு' தொடர்பான ஆய்வொன்றை முன்னெடுத்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

அதேபோன்று இவ்வருடம் ஜனவரி - செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 145,288 பேருக்கான நிதியுதவியும், 604,212 பேருக்கான உணவுப்பொருள்கள்சார் உதவியும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கும் உலக உணவுத்திட்டம், எதிர்வரும் சில வாரங்களில் மேலும் 242,000 பேருக்கான உணவுப்பொருள் உதவிகளை வழங்கமுடியும் என நம்பிக்கைவெளியிட்டிருக்கின்றது.

மேலும் நாடளாவிய ரீதியிலுள்ள 7076 பாடசாலைகளில் கல்விபயிலும் சுமார் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை உணவுக்குத் தேவையான 1698 மெற்றிக் தொன் அரிசியும், 767 மெற்றிக் தொன் புரத தானியமும் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பது நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பாக அமையும்

## எஸ்.பி.திசாநாயக்க தெரிவிப்பு



நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை மேலும் அதிகரிப்பது நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பாக அமையும் என முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவது அரசாங்கத்தில் கொள்கையா? என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே எஸ்.பி.திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நான் அமைச்சராக பதவி வகித்த காலத்திலே நாட்டிலுள்ள அனைத்து தனியார் பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் 25 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களை நாட்டில் அமைத்தாலும் அவை எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்பை வழங்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதனால் உயர் கல்விக்கான தனியார் பல்கலைக்கழகங்களை மேலும் நாட்டில் உருவாக்குவது மிகவும் அவசியமானது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். - என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிடுகையில் -

சைட்டம் பல்கலைக்கழத்துக்கு அனுமதி வழங்கும்போது அப்போது எதிர்க்கட்சியில் இருந்த நீங்கள்தான் அதனை எதிர்த்தீர்கள்.

அத்துடன் நாம் எமது காலத்தில் உலக வங்கியின் நிதி உதவியைப் பெற்றுதனியார்பல்கலைக்கழகங்களை கண்காணிப்புசெய்யும்திட்டம்ஒன்றை முன்னெடுத்தோம். அது தொடர்பில் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டது. எனினும் அது நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரப்படவில்லை. -என்றார். (05)

# சீனாவின் திட்டங்களிற்கு ஆதரவளிக்கின்றாரா பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன்?

## வெடித்தது புதிய சர்ச்சை

இலங்கையில் சீனாவின் நிதியுதவியுடனான திட்டங்கள்; இந்தோ பசுபிக்கில் சீனா ஆழமாக காலடி பதிப்பதற்கு உதவலாம் என்ற கரிசனைகளுக்கு மத்தியில் இலங்கையில்சீனாநிதியுதவிஉடனான துறைமுகநகரத்தை ஊக்குவித்தமைக்காக பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட்கமரூன்கடும்விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார்.

கொழும்பு துறைமுகநகரத்துக்கு விஜயம்மேற்கொண்டபின்னர்அந்தத் திட்டம் குறித்து உரையாற்றுவதற்காக செப்ரெம்பர் மாதம் டேவிட் கமரூன் மத்தியகிழக்கிற்கு சென்றார் என பொலிட்டிக்கோ தெரிவித்துள்ளது.

சீனாவின்சர்வதேசஉட்கட்டமைப்பு திட்டமாக புதிய பட்டுப்பாதைதிட்டத்தின் முக்கியபகுதிஇந்தகொழும்புதுறைமுக நகரம். சிங்கப்பூருக்கு போட்டியாக இது உருவாக்கப்படுகின்றது என்ற கருத்தும் உள்ளது.

கொழும்புதுறைமுக நகரத்தின் கட்டுமானத்துடன் தொடர்புபட்ட சீன நிறுவனத்தின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே டேவிட்கமரூன் இணைத்துக்கொள்ளப்பட்டார் என இலங்கையின் முதலீட்டு விவகாரங்களிற்கான அமைச்சர் டிலும் அமுனுகம பொலிட்டிக்கோவிற்கு தெரிவித்துள்ளார். இது குறித்து பொலிட்டிக்கோ மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

டேவிட் கமரூன் இரண்டு நிகழ்வுகளில் உரையாற்றியிருந்தார் அபுதாபியில் அவர் கலந்துகொண்ட நிகழ்வில் 100 பேர் கலந்துகொண்டிருந்தனர். டுபாயில் அவரின் நிகழ்வில் 300 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

இது முற்றுமுழுதாக சீனாவின் திட்டமில்லை-இது இலங்கையின்திட்டம் என்பதை டேவிட்கமரூன் வலியுறுத்த முனைந்தார் எனத் தெரிவித்துள்ள திலிம் அமுனுகம சீனாவும் அவர் அதனையே வலியுறுத்தவேண்டும் என விரும்பியிருக்கலாம் என கருதுகின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

டேவிட்கமரூனைஉள்வாங்குவது குறித்துசீனநிறுவனமேதீர்மானித்தது இலங்கைஅரசாங்கம்இல்லைஎனவும் இலங்கைஅமைச்சர்தெரிவித்துள்ளார். இதேவேளை முன்னாள் பிரதமருக்கு சீனாவுடன் நேரடிதொடர்பில்லை கொழும்புதுறைமுகநகரத்துக்கு நிதி வழங்கும் நிறுவனத்துடனும் தொடர்பில்லை என அவரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். டேவிட் கமரூனை அமெரிக்காவை தளமாக கொண்ட வோசிங்டன் பேச் சாளர்கள் பணியகம் என்ற அமைப்பே ஏற்பாடு செய்தது என்று அவரது பேச்சாளர் தெரிவித்துள்ளார். இலங்கையின் கேபிஎம்ஜி நிறுவனமும் இந்த நிகழ்வுடன் தொடர்புபட்டிருந்தது. இந்த வருட ஆரம்பத்தில் இலங்கை ஜனாதிபதியை சந்தித்த பின்னரே டேவிட்கமரூனும் இந்த விடயத்தில் ஈடுபாட்டை காட்டினார் என டேவிட் கமரூனின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு தொடர்பில் கமரூன் சீன அரசாங்கத்துடனேயோ அல்லது கொழும்பு துறைமுக நகர திட்டத்தை முன்னெடுக்கும்நிறுவனத்துடனேயோ தொடர்புபட்டிருக்கவில்லை. இலங்கை அரசாங்கம் கொழும்பு துறைமுக நகரத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றது எனத் தெரிவித்துள்ள அவரது பேச்சாளர் உரைக்காக டேவிட் கமரூனிற்கு எவ்வளவு பணம் வழங்கப்பட்டது என்பதைத் தெரிவிக்க மறுத்துள்ளார். பிரிட்டனின் முன்னாள் பிரதமரின் நடவடிக்கைகள் குறித்து கடும் ஏமாற்றம் வெளியிட்டுள்ள கென்சவேர்ட்டிவ் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர் இயன்டங்கன்ஸ்மித் புதிய பட்டுப்பாதை திட்டத்திற்கும் சமூக அபிவிருத்திக்கும் எந்த தொடர்பும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

புதியபட்டுபாதைதிட்டம்நாடுகளை சீனாவின் கைதிகளாக்குகின்றது எங்கள் அனைவருக்கும் சீனா ஆபத்தான நாடு என்பதால் டேவிட் கமரூன் இதனைதெரிவுசெய்திருக்கக் கூடாதுஎனவும்அவர்தெரிவித்துள்ளார்.

இது தவறான விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# ஜானகவுக்கு அச்சுறுத்தல்: விசாரணை சி.ஐ.டி.யிடம்

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின்ஆலோசனைக்குஅமையஇந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் அந்த திணைக்களத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவைக் கொலை செய்யாமலிருப்பதற்காக , 15 லட்சம் ரூபா கப்பம் கோரிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்தே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (05)

# நாட்டின் சுகாதாரத்துறை பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நாடாளுமன்றில் உடன்படிக்கை

## சன்ன ஜயசுமண தெரிவிப்பு

நாட்டில் நிலவும் சுகாதாரத் துறை பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கப்பாடு ஒன்றிற்கு வந்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.



நாட்டில் நிலவும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் தொடர்புடைய நாடாளுமன்றஉறுப்பினர்கள் குழு புதன்கிழமை விசேட கூட்டம்ஒன்றுநடத்தியபோதே ஜயசுமண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் -

நாட்டின் சுகாதாரத் துறை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்தில் பல்வேறு உடன்படிக்கைகள் இந்தக் கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (05)

# 4 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் 100 கோடி ரூபா கோருகிறார் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர

பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் 100 கோடி ரூபா கோரி ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜகத் நிஸாந்த மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியசட்கர் நெவில் சில்வா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தன்னைக் கைது செய்தமை தவறானது என சுட்டிக் காட்டியே 100 கோடி ரூபா கோரி கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (05)

# 'சவர்க்கார நூடில்ஸ்' இறக்குமதி குறித்து நிறுவனங்கள் பின்பற்றும்முறை தொடர்பில் அரச நிதிக் குழு ஆராய்வு

'சவர்க்கார நூடில்ஸ்' இறக்குமதி தொடர்பில் நிறுவனங்கள்பின்பற்றும்முறைதொடர்பில்அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், 1989 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மது வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளை தொடர்பில் கலந்துரையாடப்பட்டு, அதற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதியும் இதன்போது வழங்கப்பட்டது. அரசாங்க நிதி பற்றிய குழு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர் டி சில்வா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு முன்னர் இடம்பெற்ற குழுக் கூட்டங்களின்போது சவர்க்காரம் தயாரிப்பதற்கான 'சவர்க்கார நூடுல்ஸ்' இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், ஒரு சில நிறுவனங்கள்பாம்எண்ணெய்கொழுப்புஅமிலங்கள் இறக்குமதி செய்வதாகவும், அண்மையில் சுங்க வரி திருத்தம் செய்தமையால் அதற்கு 24 வீதம் அறவிடப்படுவதாகவும் இதன்போது வெளிப்பட்டது.

அத்துடன், ஒரு சில நிறுவனங்கள் சவர்க்கார நூடுல்ஸ் உற்பத்திக்கு குறைந்த வரியின் கீழ் பல்மிடிக் மற்றும் லூரிக் அமிலங்களை இறக்குமதி செய்வதாகவும் இதன்போது இனங்காணப்பட்டது.

இலங்கைகைத்தொழில்தொழில்நுட்பநிறுவனத்தின் அறிக்கைக்கு அமைய மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவிப்பதற்கு அமைய 'சவர்க்கார நூடுல்ஸ்'உடன் ஒப்பிடும்போது பல்மிடிக் மற்றும் லூரிக் அமிலங்களை பயன்படுத்தி சவர்க்காரம் உற்பத்தி செய்வதில் பாரிய தொழில்நுட்ப முதலீடு மாற்றமோ இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கமைய, சவர்க்கார நூடுல்ஸ் நேரடியாக இறக்குமதி செய்வதை விட குறிப்பிடத்தக்க அளவு குறைந்த விலையில் அமிலங்களை இறக்குமதி செய்வதால் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மோசடி செய்கின்றகவா என்பதைக் கண்டறிய வேண்டும் என அரசாங்க நிதி பற்றிய குழு வலியுறுத்தியது.

அதற்கமைய, இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் அறிக்கையை உறுதிப்படுத்தி குழுவுக்கு வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. அத்துடன், வரித் திருத்தம் ஊடாக ஈட்டப்படும் மாதாந்த வருமானம் பற்றியும், சந்தையில் சவர்க்காரத்தின் விலை மாற்றம் இடம்பெறும் விதம் தொடர்பிலும் குழுவுக்கு அறிவிக்குமாறும் நிதி அமைச்சுக்கு பரிந்துரை வழங்கப்பட்டது. மேலும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடு கருத்திற்கொள்ளப்பட்டதுடன், அதற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்போது இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல, நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, நிமல் லான்சா, பிரேம்நாத் சி. தொல்வத்த, மதுர விதானகே, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மயந்த திசாநாயக்க, ஹர்ண ராஜகருணா, விஜிர அபேவர்தன மற்றும் இசுறு தொடங்கொட ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!






இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# பதுளை - மொரஹெல விபத்து: ஒருவர் உயிரிழப்பு; 18 பேர் காயம்

பதுளை - மொரஹெல வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 18 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய உல்பாத ஹண்டி என்ற இடத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸூம் மீகஹகிவுலவில் இருந்து மொரஹெல நோக்கி பயணித்த பஸ்ஸூமே மோதி சுமார் 40 அடி உயரத்தில் இருந்து பள்ளத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

மேலும் விபத்துக்குள்ளாகிய 8 பேர் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (05)



# வெளிநாட்டு சிகரெட்டுக்களை இலங்கைக்கு கடத்தியவர் கைது

வெளிநாட்டு சிகரெட்டுக்களை சட்டவிரோதமாக இலங்கைக்குகடத்தியவர்த்தகர்ஒருவர்கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் நாத்தாண்டியா பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய வர்த்தகர் ஆவார்.

பல முறை வியாபார நடவடிக்கைகளுக்காக விமான பயணங்களில் ஈடுபடும் இவர் வியாழன் அதிகாலை 6.05 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ள நிலையில், சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய வருகை முனையத்தில் சோதனையின் போது அவரது பயணப் பொதிகளில் 14 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்படவுள்ள நிலையில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி அன்று நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பெண்களால் ஆண்களின் உரிமைகள் பாதிப்பு: டயானா விவகாரம் குறித்து ரோஹண கருத்து

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுஜித் பெரேராவால், நாடாளுமன்றில் வைத்துதான் தாக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபையில் தெரிவித்தார்.

இது குறித்து குற்றம் சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா சபையில் விளக்கமளித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் 'நான் தாக்குதல் நடத்தியதாக டயனா கமகே தெரிவித்தார். அப்படி எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை.

நான் கீழே இறங்கும்போது, அவர் அநாகரீகமான வார்த்தைகளால் ரோஹண பண்டார உறுப்பினருடன் விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

இதன்போது நான், அவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டாம் எனக் கூறினேன். இதனைப் பொருட்படுத்தாத அவர் என்மீது தாக்குதல் நடத்தினார்.



நான் அப்போது அந்தத் தாக்குதலை தடுக்க மட்டும்தான் முற்பட்டேன். இதுதொடர்பாக சி.சி.டி.வி. காட்சிகளை பார்வையிட்டால் டயனா கமகே எவ்வாறு செயற்பட்டார் என்பதை அறிந்துகொள்ள முடியும் எனக் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார, சபைக்குள் நாம் ஒரு கருத்தை கூறினால், அதுதொடர்பாக வெளியே கதைக்கக்கூடாது.

நான் அமைதியாக மின்தூக்கி அருகில் செல்லும்போது, டயனா கமகே கடுமையான வார்த்தைகளால் தூற்றிக் கொண்டிருந்தார். நான் அதனைக் கவனத்தில் கொள்ளாமல் நகர்ந்தபோது, அவர் என் பின்பாக வந்து அநாகரீகமான வார்த்தைகளால் என்னைத் தூற்றினார்.

பெண் உரிமை தொடர்பாக கதைக்கிறோம். அதேநேரம், பெண்களால் ஆண்களின் உரிமைகள் பாதிக்கப்படுவது தொடர்பாகவும் கதைக்க வேண்டும்.

நாடாளுமன்றில் நடந்த பிரச்சினையை வெளியே கொண்டு சென்றதே தவறாகும். ஆண்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்' என கூறியிருந்தார். (05)

# மீண்டும் கை வைத்தால் இனமுரண்பாடு தோன்றும்

## சரத் வீரசேகர எச்சரிக்கை

விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டும் கொல்லப்பட்ட திவுல்பத்தான மக்கள் மீது மீண்டும் கை வைத்தால் தமிழ் - சிங்கள இன முரண்பாடு தோற்றம் பெறும் என சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் -

ஒவ்வொருஇனத்திற்கும்ஒவ்வொருபகுதி, நாட்டில் ஒதுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் புலிகள் அமைப்பை தோற்கடித்ததையடுத்து, இன்று ஜெனிவாவில் போர்க்குற்றச்சாட்டுக்கு முகம் கொடுத்துள்ளோம். இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும்நாடுகளினாலேயேநாம்குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

இந்த நாடுகள் அன்று எம்மை போர் நிறுத்தம் செய்யுமாறு அறிவித்தன. ஆனால், இன்று காஸா மீது போரைத் தொடருமாறு அதே நாடுகள்தான் தெரிவித்து வருகின்றன. இது உண்மையில் வெட்கத்துக்குரிய விடயமாகும்.

வெளிநாடுகளில்வாழும்தமிழ்ப்பிரிவினைவாதிகள், இன்றும் ஈழக்கனவுடன்தான் இருக்கிறார்கள். அந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளுக்கு இவர்கள் அழுத்தம் கொடுக்கிறார்கள். நாம் பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள்.

இந்நிலையில், திவுல்பத்தான கிராமத்திலிருந்து சிங்கள மக்களை வெளியேற்ற வேண்டும் என இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். அவருக்கு ஒன்றைத் தெரிவிக்க வேண்டும். இந்த விடயத்தில் தேவையில்லாமல் தலையிடாதீர்கள். போர்க் காலத்தின்போது புலிகளால் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் அந்த கிராமத்திலிருந்து சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

போர் முடிவுக்கு வந்ததையடுத்துத்தான், அந்த விவசாயிகள் தங்களின் பூர்வீக நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை தொடங்கினர். இவர்களின் பெயர் பட்டியல் அனைத்தும் கிராம சேவகரிடம் உள்ளது. இந்த அப்பாவி மக்களை அங்கிருந்து வெளியேற்ற நினைப்பது தவறாகும்.

இது மீண்டும் தமிழ் -சிங்கள முரண்பாட்டுக்கு இடமளிக்கும். ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு பகுதி, நாட்டில் ஒதுக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பது புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவாகும் என்பது அனைவருக்கும் தெரியும். இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு, நாடாளுமன்றுக்கு வரும் முன்னர் பிரபாகரனிடம்தான் பதவியேற்றார்கள். எனவே, நாட்டில் இல்லாத பிரச்சினையொன்றை ஏற்படுத்த வேண்டாம்என் இவர்களிடம்நான்கேட்டுக் கொள்கிறேன். -எனத் தெரிவித்தார். (05)

# பொலிஸாருக்கு டுபாயில் இருந்து உயிரச்சுறுத்தல் சாமர சம்பத் கூறுகிறார்

பொலிஸ் விளக்கமறியலில் இருந்த கடந்த சில வருடங்களில் பதினைந்து பேர் உயிரிழந்துள்ளனர் என எதிரணி பிரதான கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றில் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபரின் பதவி காலம் நீடிப்பு குறித்து நாடாளுமன்றில் கருத்து முன்வைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஐரோப்பிய மனித உரிமைகள் பேரவை இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடி உள்ளதாக தெரிவித்துள்ள எதிர்க்கட்சியின் பிரதான கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் பொலிஸார் தொடர்பாக பெரும் ஏமாற்றம் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

எனினும், இதற்கு பதிலளித்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத், தற்போது தென் மாகாணத்தில் பொலிஸாரால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாகக் கூறி பொலிஸார் பலர் இடமாற்றம் கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு டுபாயில் இருந்து உயிருக்கு அச்சுறுத்தல் வரும் வகையில் அழைப்புகள் வருகின்றனஎனவும்அவர்சபையில்சுட்டிக்காட்டினார்.

இதனால், தெற்கில் விசாரணைகளை முன்னெடுக்க முடியாதளவுக்கு பொலிஸார் நெருக்கடியில் இருக்கின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# அமைச்சர் டயனா கமகே மீது தாக்குதல்? அறிக்கை சமர்ப்பிக்க சபாநாயகர் பணிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேராவால், நாடாளுமன்றில் வைத்து நேற்று தான் தாக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபையில் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக உடனடியாக விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த சர்ச்சை தொடர்பாக ஆராய்வதற்காக பிரதமரின் வேண்டுகோளுக்கு அமைவாக, சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் டயானா கமகே, 'நாடாளுமன்ற நூலகத் திற்கு அருகிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பிரித்தியேக மின்தூக்கிக்கு அருகில், என் மீது அத்துமீறலொன்று மேற்கொள்ளப்பட்டது.

சுஜித் பெரேரா என்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரால் நான் தாக்கப்பட்டேன்.

சுமார் ஒன்றரை - இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதுதொடர்பான விசாரணையொன்றை நான் சபாநாயகரிடம் கோருகிறேன்.

அத்தோடு, இந்தவிடயம்தொடர்பாக நான் சட்டநடவடிக்கையொன்றையும் மேற்கொள்ளவுள்ளேன்.

ஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, பெண்கள் தொடர்பாக பாரிய பிரச்சினையுள்ளது.

சுஜித் என்ற இந்த நபர், தனது மனைவி மீதும் தாக்குதல் நடத்துபவராகத்தான் இருக்க முடியும். அநாகரீகமான நபர்கள்தான் இவ்வாறு செயற்படுவார்கள்.

நாடாளுமன்றில் ஓர் உறுப்பினர் ஒருவர் பெண் உறுப்பினர் மீது தாக்குதல்நடத்த முடியுமாக இருந்தால், ஐக்கிய மக்கள் சக்தியினர் ஏனைய பெண்கள் தொடர்பாக எதனைப் பேசுவார்கள்?

இந்தவிடயம் தொடர்பாக நிச்சயமாக விசாரணையொன்று அவசியமாகும். இதற்கெதிராக நான் வீதிக்கு இறங்குவேன்' என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# டயனா கமகே கூறியது பொய்க்குற்றச்சாட்டு காணொளியும் உள்ளது என்கிறார் லக்ஷ்மன்

டயனா கமகேவல் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையற்றது என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் சபையில் இல்லாத போது, டயனா கமகேவால், எமது உறுப்பினர் மீது குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டது. இதுதொடர்பாக நாம் சபாநாயகரை சந்தித்தோம்.



காணொளியையும் காண்பித்துள்ளோம். இதன்போது, யார் அநாகரீகமாக நடந்துக் கொண்டது மற்றும் யார் கைப்பையால் தாக்குதல் நடத்தியது என்பதை சபாநாயகரிடம் தெளிவாகக் காண்பித்துள்ளோம்.

இதுதொடர்பாக விசாரணை நடத்துமாறும் கூறியுள்ளோம். இந்த குற்றச்சாட்டை மறுக்கிறோம். நாடாளுமன்றதிற்கு உள்ளே நடந்த பிரச்சினையென்பதால், சபாநாயகர் இதற்கான தீர்வை வழங்க வேண்டும். -எனக் கூறியுள்ளார். (05)

# இலங்கையில் நடந்ததும், பாலஸ்தீனத்தில் நடப்பதும் ஒன்றுதான் என்கிறார் சுமந்திரன்

'இலங்கையில் நடந்த போரும், தற்போது இஸ்ரேல்-பாலஸ்தீனத்திற்கு இடையே இடம்பெற்றுவரும் போரும் ஒன்றுதான்' என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேல் - பாலஸ்தீனத்திற்கு இடையே இடம்பெற்று வரும் போர் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இஸ்ரேல்-பாலஸ்தீனத்திற்கு இடையிலான இப்போரானது அரசியல் மோதலாகும்.

இதனை அரசியல்ரீதியாகத் தான் தீர்க்க முற்பட வேண்டும். உலகில் பல மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. மக்களுக்கிடையிலும், தேசங்களுக்கிடையிலும் பல மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் இடம்பெற்றதும் அரசியல் ரீதியான மோதலாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அரசியல் மோதலுக்கு இராணுவ நடவடிக்கைகள் தீர்வாக அமையாது என்று பாலஸ்தீன இஸ்ரேல் மோதல் தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால், அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இந்நாட்டில் அரசியல் மோதல் இடம்பெற்றபோது, இராணுவத்தின் ஊடாகவே தீர்வு வழங்கப்பட்டது. வன்முறைகள் ஒருபோதும் தீர்வாகாது. - இவ்வாறு சுமந்திரன் தெரிவித்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.10.2023இல் வெளியிடப்பெற்றது.